பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் 17 NOV 1954 குருகுலத் சாலை

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—7 குருகுலம், மாம்பாக்கம்; செய. புரட்டாசி, உ௬—10—54 தளிர்—1

போதனா மொழிக் குழப்பம் (கல்வி மந்திரி)

முதல் பாரத்திலிருந்து கல்லூரிப் படிப்பு முடிய ஓரே மொழியில் சொல்லித் தரவேண்டும்

கும்பகோணம் கல்லூரியில் நூற்றாண்டு விழாவையொட்டிக் கட்டப்பட விருக்கும் ஒரு புதிய கட்டிடத்திற்குக் கல்வி மந்திரி ஸ்ரீ ஸி. சுப்ரமண்யம் (11-10-54) அஸ்திவாரக் கல் நாட்டியபோது பேசியது.

'கல்வியானது மாணவர்களின் வாழ்க்கைக்குப் பயன்படும் படியாக இருக்க வேண்டும். தற்கால மாணவர்களுக்குள் அறிவுச் சக்தி, முன்னால் மாணவர்களுக்கு இருந்ததைக் காட்டிலும் எவ்வகையிலும் குறைந்ததன்று. மாணவர்களுக்குச் சரியாக வழி காட்டாதது பெரியவர்களின் தவறுதான். ஹைஸ்கூலில் எல்லாப் பாடங்களையும் தமிழில் படித்துவிட்டுக் கல்லூரிக்குப் போகும்போது ஆங்கிலத்தில் பாடம் கேட்க வேண்டியிருப்பதால் மாணவர்களின் நிலைமை பரிதாபகரமாக இருக்கிறது. நீரிலிருந்து தரையில் விடுபட்ட மீன்போல அவர்கள் பாடங்களைப் புரிந்து கொள்ள முடியாமல் தவிக்கின்றனர். எனவே கல்லூரிப் படிப்பின் தரம் மட்டமாக இருப்பதாகப் புகார் செய்வதில் அர்த்தமில்லை.

முதல் படிவத்திலிருந்து, கல்லூரிப் படிப்பு முடியும்வரை போதனா மொழி ஆங்கிலமாக இருக்க வேண்டுமா, தமிழாக இருக்க வேண்டுமா என்பதைத் தெளிவாக முடிவு செய்ய வேண்டும். இரண்டையும் போட்டுக் குழப்பிவிட்டு, பிறகு படிப்பின் தரம் மட்டமாக இருப்பதாகக் குறை கூறுவதில் பயனில்லை. மாணவர்களும் ஒன்றுகூடி இதைப் பற்றிச் சிந்திக்கவேண்டும். ஆங்கில "லெக்சர்கள்" புரியாமல் கல்லூரிகளில் படித்து வரும் பல மாணவர்களின் பொறுமையைக் கண்டு உண்மையிலேயே நான் வியப்படைகிறேன்!

மாணவர்களின் ஒழுக்கத்தைக் குலைக்கும் சமூக விரோத சக்திகளை அண்டவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒழுக்கம் இல்லையேல், வேறு எது இருந்தாலும் வாழ்க்கையில் பயன்படாது" என்று மந்திரி வலியுறுத்தினர்.

அதிகப்படி பாடங்கள் ஆரம்பிக்க வசதி பற்றிய கோரிக்கைக்கு மந்திரி பதிலளிக்கையில் பாடங்களையும், மாணவர்களின் எண்ணிக்கையையும், அதிகரித்துக்கொண்டு போவதற்குப் பதிலாக ஏற்கனவே உள்ள பாடங்களை, ஆர்வமுள்ள மாணவர்களுக்குத் தீவிரமாகப் போதிப்பதில் கவனம் செலுத்தும்படி மந்திரி தெரிவித்தார்.

—தினமணி 12-10-54

“முல்லைக் கொடி”

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

7-ம் ஆண்டுக் கையொப்பம்

(8-10-54 முதல்)

உள்நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0

ஆயுள்—

கையொப்பம் ரூ. 100 0 0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

“யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா.”

—புறநானூறு.

மலர்	செய, புரட்டாசி,	தளிர்
7	8-10-54 வெள்ளி.	1

கந்த கோட்டத்தில்

சென்னையில் முக்கியமான பேட்டைகளில் வாரந்தோறும் ஆலய வழிபாடும் தொண்டும் செய்வதெனக் குருகுலத்தார் மேற்கொண்டுள்ள கோட்பாட்டின்படி சென்ற வாரம் பிள்ளையார் சதுர்த்தியன்று பிரசன்ன விநாயகர் ஆலயத்தில் திருமிகு ராஜாஜி அவர்களால் துவக்கி வைக்கப் பெற்றது. இவ் வாரம் 11-9-54ல் கந்தகோட்டம் கந்தசுவாமி கோயிலில் சென்னை நகரத் தந்தை (மேயர்) திரு வி. முனுசாமி பிள்ளையவர்கள் தலைமையில் வழிபாடு தேனிப்பு (தியானம்) சொற்பொழிவு ஊர்வலம் முதலியவை சிறப்புற நிறைவேறின. இப் பேட்டைப் பெருமக்கள் வேண்டிய அனைத்தும் ஏற்பாடுகளும் திறம்படச் செய்தும் ஏராளமாய்க் கூடியிருந்தும் வழிபட்டனர்.

இறை வழிபாட்டிற்குப் பின் தக்ஷிணாமூர்த்தி திருமுன்னிலையில் எங்கள் ஆசிரியப் பெருந்தகை எல்லாரையும் சிறிது நேரம் வீற்றிருக்கச் செய்து தியானிக்கச் செய்தார். அதுபோது அவர்கள் அருளியது:—

“விசாலமான இந்த இடத்தில் இறைவன் ஒரு புறம் மங்கலக் கோலமாயும் ஒரு பக்கம் மௌனமாயுமிருக்கிறார். அங்கு அலங்காரம்; இங்கு அமைதி. இவ்வாலயத்தில் இங்கு பலர் ஒருங்கு சேர்ந்திருக்கத் தகுதியாக விசாலமான இடம் அமைந்திருப்பது சிறப்பும் இயற்கை ஆற்றலுமாம். இது பேசாமலிருக்குமிடம். அதனால் 5 நிமிடம் மௌனமாய் அமைதியாய் இருப்போம்.

தண்ணீர் அலையாமலிருந்தால் உள்ளேயிருக்கும் பொருள் தெரியும். அலைந்துகொண்டிருக்கும் இந்த உலகத்தில் காலை முதல் மாலைவரை எத்தனையோ விகாரங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தோம். இப்போது மனம் அலையாமல் மௌனமாயிருந்து பார்த்தால் அந்த அலங்காரப் பொருள் (இறைவன்) நன்றாய்த் தெரியும். உள்ளே யிருப்பது சக்தி வாய்ந்தது. அந்தச் சக்தியை நம் மனத்தில் தோன்றும் பல எண்ணங்கள் அலைத்துவிடுகின்றன. அவனையே நினைந்து பேசாமலிருக்க, உள்ளே யிருப்பது நன்றாய் விளங்கும். நம்பிக் கொஞ்சநேரம் [illegible]போம். ஆண்டவன் இங் [illegible] இருந்தபடி இருந்து காட்டுவதால் அவன் செயல்படி நாமும் இருப்போம். 5 நிமிடம் இப்படி இருப்பதற்கு எவ்வளவு ஆற்றல் என்றால், 5 மணி நேரம் பேசுவதால் விளங்கும் அனைத்தும் விளங்கும். அதனால் அவன் சந்நிதானத்தில் என்ன விளங்குகிறதோ விளங்கட்டும்”.

மேற்படி தேனிப்புக்குப் பின் ஆலயத்திற்கு எதிரிலுள்ள மெத்தை மண்டபத்தில் மேயர் அவர்கள் தலைமையில் விளக்கச் சொற்பொழிவு நிகழ்ந்தது. அதன் சுருக்கம்:—

முதலில் இப் பேட்டைக் கவுன்சிலர் திரு இராகவ செட்டியார் குருகுலத்தினரையும் ஏனையோரையும் வரவேற்றுப் பாராட்டிப் பேசினார். “வள்ளற் பெருமான் வழிபட்ட தலத்தில் வணங்கி அருள் பெற்றுள்ளீர்கள். நாத்திகர் கடவுள் இல்லை என்கின்றனர். ஆண்டவன் இல்லாவிட்டால் உலகம் அழிந்து விடும். ஆத்திகப் பிரசாரம் செய்ய அருமையான தலைவர் நம் தத்துவப் பேராசிரியர்; இவர் நீண்ட ஆயுளும் எல்லாச் சீரும் சிறப்பும் பெற்று வாழும்படி அருள் புரியுமாறு இறைவனை வேண்டுகின்றேன்”.

அடுத்தபடி குருகுலச் செயலாளர் திரு. ஆடலரசு அவர்கள் தமிழ்ப் பற்றுக் கொண்ட இளைஞர்களை அறை கூவி அழைத்து, “சங்ககாலச் சான்றோர் போன்று வாழ்க்கை உண்மைகளை இளைஞருக்கு நல்ல முறையில் தெள்ளத் தெளிய விளக்கம் தருபவர் எங்கள் ஆசிரியப் பெருமான்; அவர் அறிவுரைகள் கேளாத குறையால் தான் இன்னும் மக்கள் மாறுபட்டிருக்கிறார்கள். சமயத்துறையில் தங்களுக்குள்ள ஐயங்களையும் தீர்த்[illegible]கொள்ளலாம். சமய உண்மை

களை அறிவு முறையில் அலசி ஆராய்ந்து கேட்கும் கேள்விகளுக்குப் பதில் அளிப்பார், விளக்குவார். உண்மை நாட்டமுடையவர்கள் கட்டாயம் இருந்துவார்கள் இளைஞர்களே! எங்கள் ஆசிரியரின் சொற்பொழிவுகளுக்குத் தொடர்ந்து வாருங்கள் உண்மையறியும் நாட்டங்கொண்டு வாருங்கள்; அவர் சொல்லமுதத்தைப் பருகுங்கள். உங்கள் ஐயங்கள் தீர்க்கப் பெறுவீர்கள்; என்று நம்புகின்றேன் என்றார்

பின்னர் மேயர் அவர்கள் 'உலகில் நாத்திகரென்பவர்கள் உண்மையில் ஆத்திகர்கள்தான்; ஏனெனில் அவர்கள் வேறு போக்கில் எப்போதும் இறைவனை நினைத்த வண்ணமாகத்தானுள்ளார்கள்'' என்று ஓர் வைணவ துவேஷியான சிவபக்தன் கதையையும் சொல்லி நகைச் சுவை ததும்ப ஆசியமாகப் பேசினார்கள்

கடைசியாக நம் ஆசிரியப் பெருமான் தமக்கேயுரிய அற்புதத் தனிப் போக்கில் வழிபாடு என்பதென்ன என்றும் பிள்ளையார் முருகன் சிவம் சக்தி சோமாஸ்கந்தர் முதலிய மூர்த்திகளின் தத்துவங்களைப் பற்றியும் பிரணவம் பஞ்சாக்கரங்களைப் பற்றிய சிறப்புக்களையும், மனவாக்கு காயங்களால் தொண்டு செய்ய வேண்டுவதன் அவசியத்தைப் பற்றியும் மிக விரிவாக விண்ணிலுள்ளோரும் விரைந்தோடிவந்து வியந்து கேட்டு விம்மிதமடையும் வண்ணமாய் விளக்கங்கள் பல தந்து விரிவுரையாற்றினார்! அவ் வமுதப் பொழிவு இதோ அப்படியே வெள்ளங்கொண்டு புரண்டு உங்கள் அனைவரையும் நாடி வருகிறது. எல்லோரும் சேர்ந்து பருகலாம், சேவாரும் செகத்தீரே!:—

“வழிபாட்டுக்காக மன்பதைத் தொண்டுக்காக நாம் இப்போது ஒவ்வொரு பேட்டைக்கும் போய் வருகிறோம். அதன்படி கந்த கோட்டமிருக்கும் இப் பேட்டைக்கும் வந்திருக்கிறோம். அன்பர்கள் நல்ல ஏற்பாடுகள் செய்திருப்பதாகத் தெரிகிறது சென்னையிலேயே கந்த கோட்டம் எல்லா வளங்களும் அமைந்த கோயில் மயிலாப்பூர் கபாலீச்சுரர் கோயிலும் இக்கக் கந்தசுவாமி கோயிலும் இரண்டும் தென்னாடு முழுதும் தெரிந்துள்ள சென்னைக் கோயில்கள். அதிலும் கந்த கோட்டம் நகரத்தின் நடுவிலிருக்கிறது நகரில் தொண்டு வாரந்தோறும் நடைபெற விருப்பதால் நகரத் தந்தை இன்றைய விழாவுக்கு வந்திருக்கிறார் இப் பேட்டையின் முதன்மையாளரும் இவ்வாலய முதன்மையாளரும் மற்றப் பெருமக்களும் கூடி நிகழ்த்துவது மிக்க மகிழ்ச்சி.

வழிபாடு:

ஒவ்வொரு பேட்டையிலும் ஆலய வழிபாடும் தொண்டும் நடத்த எண்ணம். வழிபாடு என்றால் ஆண்டவனிடத்தில் ஒன்றியிருப்பது. அவனுடைய தன்மைகளில் நம் தன்மைகளைச் சேர வைப்பது. அதற்கு ஆலயம் மூர்த்தி சாத்துபடி அலங்காரம் தூப தீபாராதனை தியானம் முதலியன தக்க உதவியாயிருக்கும். நம் முக்கிய நோக்கம் ஆலய மூர்த்தியைப் பார்த்து, வணங்க வருவதென்பதன்று; ஆண்டவன் தன்மையில் நம் தன்மையைச் சேர்க்க வருவதுதான் வழிபாடு; அவன் கருணையுள்ளவன் என்றால் நாமும் கருணையாளராக மாறவேண்டும்; அவன் கண்ணியமுள்ளவன் என்றால் நாமும் அப்படியே மாறவேண்டும் அதுதான் வழிபாடு. ஆண்டவன் ஆருயிர்களை எப்போதும் மூச்சுவிடாமல் அவைகளின் நலங்களையே கருதியிருப்பது போல நாமும் நம் சூழவிருக்கும் ஏழை எளியோர் சிற்றுயிர்கள் நலங்களைக் கருத வேண்டும்; இதுவும் வழிபாடு அவன் வழியில் நாம் உடன்படுவதுதான் வழிபாடு. அவன் வழி என்பதேதோ, அப்படி நாம் ஆகவேண்டும்.

யாரை வழிபடுவது?

மனிதர்கள் ஏதோ ஒரு வகையில் குறையுள்ளவரா யிருப்பார்கள். ஞானசம்பந்தர் திருவள்ளுவர் போன்ற குருமாரும் அப்படியே! ஓர் ஆசிரியரை வைத்துக் கொண்டு வழிபடலாமா என்று பார்த்தால், அவர்களும் இன்னொரு பெரியோரைச் சார்ந்திருக்கின்றனர். அப் பெரியோர்களும் வேறு சான்றோர்களைச் சார்ந்திருக்கின்றனர். இப்படியே பார்க்கப் போனால் கடைசியில் ஒரு முதல்வனிடம் முடிவுறும். அவர்தாம் மூல முதல்வனா இறைவன். எப்படிப்பட்ட ஆசிரியருக்கும் கொஞ்சமாவது ஓர் மயிரிழையாவது குற்றமிருக்கும். பூமியில் கருவிலிருந்து பிறந்து வளர்ந்தவர்களுக்குக் கடுகளவாவது வினைத் தாக்குதலிருக்கும்;

Telegrams: "RAMBROS"
N. Ramu Bros,
GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

அதனால் குற்றம் குறைவிருக்கும். ஆண்டவன் அப்படியில்லை; அதனால் அவன் வழியில் செல்வோம்.

ஞானசம்பந்தாதிகள் நால்வரும் திருவள்ளுவரும் சான்றோர்களும் கூட வாலறிவனாகிய ஆண்டவனைத்தொழுங்கள்என்றுதான் சொல்லுகிறார்கள். இன்று பாரதியார் திருநாள். பாரதியார் காந்தி மகானைப் போற்றினார். காந்தியாரும் திருவள்ளுவர் போன்றவர்களை மதித்தார்; பின்னால் வந்தவர்கள் முன்னிருந்த பெரியோர்களை மதித்தனர்; சம்பந்தர் குற்றமற்ற இறைவனைத் தொழச் சொல்கிறார்.

ஆண்டவனைத் தொழ ஆலயந்தான் சிறந்த இடம்; சுத்தம் தரும். வேறு எந்த இடமும் தகுதி குறைவு.

முன் வாரம் பிள்ளையாரையும் இவ்வாரம் முருகக் கடவுளையும் வழிபடுகிறோம். சிவாலயத்தில் பிள்ளையார் முருகன் தவறாம லிருப்பார்கள். திருவண்ணாமலையில் கோயில் வாயிலிலேயே இவர்கள் இருக்கின்றனர். 'கோயில் வாயிலிலேயுள்ள முருகப்பெருமான்தான் எனக்கருள் செய்தான்' என்கிறார் அருணகிரியார். அண்ணன் தம்பிகளிருவரையும் பார்த்துக் கொண்டு உள்ளே போனால் அம்மை அப்பர் இருக்கின்றனர். அதனால் விநாயகரை வணங்கிக் கொண்டு முருகனை வணங்க முறைப்படி வந்துள்ளோம். நாம் முறையோடு செல்வதால் ஆண்டவன் நம் அனைவருக்கும் அருளை வாரி வழங்குவார்.

பிள்ளையார்:

பிள்ளையாருக்கு யானைமுகம், பெரிய வயிறு, சின்ன குட்டையான கால்கள். பார்க்க வேடிக்கையாயிருக்கிறது. அவர் நடந்தால் பின்னும் வேடிக்கை; நடனம் செய்தால் வியப்பைச்சொல்லவே வேண்டியதில்லை. நர்த்தன விநாயகர்; அவர் நடனம் செய்ய நாம் பார்க்க வேண்டும்! அப்போது நாமெல்லோரும் தேவ வடியில் எழுவோம்!

அவர் ஓங்கார வடிவினர். ஓங்காரம் முதலில் தோன்றும் ஒலி. அதனால் முதலில் பிள்ளையார்; அப்புறம் நல்ல அழகான முருகன் தோன்றுகிறார். ஓம் என்பது பிரணவம்; ஓங்கார ஒளிப் பிரபைக்குள்ளே ஷண்முகன் விளங்குகின்றார். 'நான் பிரபையாயிருக்கிறேன்; நீ உள்ளே யிரு' என்று இருவரும் பேசிக் கொண்டதுபோன்றிருக்கிறது! ஓங்காரத் துள்ளொளி முருகன். முதலில் பிள்ளையார், அவருக்குள்ளே முருகன். நாம் இக்கருத்துக்களைத் தெளிவாய் வாங்கிக் கொள்ள வேண்டும். அதனால் பிள்ளையார் முருகன் அம்மா அப்பா வணக்கம் என இப்படி முறையோடு போக நேரும். நம்மோடு பிள்ளைகளும் கூடச்சேர்ந்து அம்மா அப்பாக்களைப் பார்க்க வருவார்கள்!

முருகன்-சிற்சக்தி:

ஓங்காரத் துள்ளொளி நம்மிடமுள்ள சிற்சக்தி; தெய்வசக்தி (பெரிய சக்தி)யைப் பராசக்தி என்பர்; அதை அநுபவிக்கும்போது நம்மிடம் விளங்கும் சக்திதான் சிற்சக்தி, அதாவது அறிவு சக்தி 'சித்' என்றால் அநுபவிக்கும் அறிவு, சாதாரண அறிவன்று.

ஒருவர் பார்வைக்கு அவலக்ஷணமாயிருந்தாலும் குயில் மாதிரிபாடுவார்; அவர் பாட்டை அநுபவிப்பவர் அவர் உடலைப் பாராது குரலைத்தான் அநுபவிப்பார்; இசை நலம் தெரியாதவர் அவர் உடம்பு எப்படி இருக்கிறதெனக் கவனிப்பார். இசையை அநுபவிக்கும் சக்தி போன்றது சிற்சக்தி. கடவுளுடைய சக்தி உயிரறிவிற் கலந்து ஒன்றை அநுபவிக்கச் செய்யும்போது அந்தத்தெய்வ ஆற்றல்'சித்சக்தி' எனப்படும். கடவுள் தன்னியல்பில் திகழுநிலையில் விளங்கும் தெய்வ சக்தியே 'பராசக்தி' எனப்படுவது எதை யனுபவித்தாலும் சரி, பலகாரம், சாப்பாடு, இசை, நாடகம், விரிவுரை எதையும் அநுபவிக்கும்போது நம்மில் உந்தும் தெய்வ சக்திக்குச் சிற்சக்தி எனப் பெயர். ஆனால், இவ்வற்ப போகங்களை அநுபவியாது பெரிய போகமாகிய ஆண்டவனையே அநுபவிக்க வேண்டும். அந்நிலையில் 'சித் சக்தி'பெரியதாய்த் திகழும்.

தெய்வசக்தி எங்கும்இருக்கும். நம்மிடம் அநுபவிக்கும் சக்தி உள்ளே யிருக்கிறது. அந்த அநுபவிக்கும் சக்தி ஒவ்வோர் ஆன்மாவிலும் இருக்கிறது; அந்தச் சிற்சக்தி வடிவமே முருகக் கடவுள். அவர் ஆன்மாவுக்குள்ளேதான் நன்றாய் விளங்குவார். கடவுள் எங்கும் விளங்கினாலும் நம்மிடம் தனிச் சிறப்பாய் வேலை செய்யும் ஆண்டவனின் கூறு, ஆண்டவனின் பங்கு, முருகன். அவர் நம்மிடம் தாராளமாய்க்கலந்துகொள்வார். சிவபெருமான் அப்படிக் கலந்து கொள்ளமாட்டாரா என்றால் கலந்து கொள்வார்; ஆனாலும் கொழுந்தாக விளங்குபவர்

கோழிக் கொடியோன். நம்மிடம் விளங்கும் சிவபெருமான்தான் முருகன்! குழந்தை சரியாகச்சாப்பிடத்தெரியாதபோது தாய் கூட இருந்து ஒத்தாசை செய்கிறாள்; ஊட்டுவாள்; குழந்தையைச்சாப்பிடச்செய்யத் தன் வாயிலும் போட்டுக் கொண்டு காட்டுவாள். குழந்தை சாப்பிடத் தாய் உதவியாயிருப்பதுபோல நாம் ஒவ்வொருவரும் அநுபவிக்க இறைவன் கூட இருந்து ஒத்தாசை செய்கிறார். அவர் கலந்து கொள்ளாவிட்டால் நாம் எதையும் அனுபவிக்க முடியாது. அதனால் "துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ" என்கிறார் திருநாவுக்கரசர். அநுபவிக்கத் தக்க கருவிகரணங்களிலிருந்து அதற்கேற்ற சக்திகள் வைத்துச் செலுத்துகிறார். அநுபவிக்கும் பண்டங்களிலும் இருந்து அநுபவப் பொருளாய் உதவுகிறார். நாரதர் அப்படி வேலை செய்பவர்; இங்கும் அங்கும் கிளறி விடுவார்; ஆனால், கலகக்காரரல்லர், கிளர்ச்சிக்காரர்! அப்படியே ஒரு பெரிய பரம்பொருளும் உலகிலும் நம்மிடத்திலும் கலந்துகொண்டு வேலை செய்கிறது. அந்தப் பெரிய பொருள் நம்மிடம் வேலை செய்யும்போது முருகன்; (ஆபீஸில் இருக்கும்போது கலெக்டர், கலியாண மனையில் உட்கார்ந்தால் மாப்பிள்ளை என்பதுபோல) வெளியேயுள்ளபோது ஒரு பெயர்; நம்மிடம் அமைந்திருக்கும்போது முருகன் அநுபவிக்கும் சக்தி சிற்சக்தி. அது ஆன்மாவினுள்ளேயிருந்து கொண்டு நம்மிடம் கலந்து கொண்டு அநுபவிக்கச் செய்கிறது; ஆன்மாவினுள்ளே விளங்குகிற அழகன் முருகன்! அதுவே சோமாஸ்கந்தர்!

சோமாஸ்கந்தர்:

சோமாஸ்கந்தர் வடிவத்தில் அம்மை அப்பர் நடுவில் சின்ன முருகக் கடவுள். ஏன் இப்படி வைத்திருக்கிறார்கள்? நம் வீட்டிலும் அம்மா அப்பா நடுவில் குழந்தையை வீற்றிருக்கச் செய்து கொஞ்சுகிறோமல்லவா? அம்மா அப்பா சிவம் சக்தி; நாம் அவர்களுக்குக் குழந்தைகள்; அவர்கள் நடுவிலிருப்பதாகப் பாவனை!

பஞ்சாக்கரத்தில் சி சிவபெருமான், வ அம்பிகை, அவை நடுவில் ய ஆன்மா; அப்படி ஒரு இடம் வரும். அந்த மந்திரத்துக்குத் தியானந்தான் உரியது. வாயால் சொல்லாமல் எழுத்தால் கருதாமல் பொருள் தியானத்தால் நிகழ்வது. இது காரண பஞ்சாக்ஷரம். வெளியே ஒலிக்கும்படி ஸ்தூல பஞ்சாட்சரம், வாயோடு ஒலிக்கும்படி சூக்கும பஞ்சாட்க்ஷரம், மோனமாய்த் தியானிப்பது காரண பஞ்சாக்ஷரமாகும்.

"உடையாள் உன்றன் நடுவிருக்கும், உடையாள் நடுவுள் நீயிருத்தி, அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால்........" என்று மாணிக்கவாசகர் மந்திர எழுத்தால் சொல்லாமல் காரணத்தைக் கருத்தால் விளக்குகிறார். "நமச்சிவாய வா அழ்க" தூலம்; "கானேயோ தவம் செய்தேன் சிவாய நம எனப்பெற்றேன்" சூக்குமம்.

கருத்தாலே ஆண்டவனுக்கும் அவன் சக்திக்கும் நடுவிலிருக்கும் சந்தர்ப்பம் ஒன்றுள்ளது. உலகத் தொண்டுகள் என்பது செய்து அம்மையோடு தொடர்பு கொள்ள, அம்மை அப்பனிடம் கொண்டுபோய்ச் சேர்க்கும் சந்தர்ப்பம்; குழந்தையைத் தாயார் தந்தையிடம் கொண்டுபோய்க் கொடுக்கும்போது குழந்தை இருவர் நடுவில் தானே இருக்கும். அந்தமாதிரி பார்வதி நம்மைக் கொண்டு போய்ச் சிவத்திடம் சேர்ப்பிக்கும் சந்தர்ப்பம், நாம் நடுவிலிருக்கும் சந்தர்ப்பம். பார்வதி பெரிய தெய்வ சக்தி. அந்தச் சக்தியை நாம் அநுபவிக்க, ஆதாரமாயுள்ள பொருளிடத்தில் நம்மைக் கொண்டுபோய்ச் சேர்க்கும். அந்த லக்ஷணத்தைக் காட்டுவது சோமாஸ்கந்தர். ஸ்கந்தர், கந்தர் என அம்மை அப்பர் நடுவிலிருக்கும் அழகிய ஆன்மாவின் தெய்வ நிலைக்குப் பெயர். அப்போது நாம் பராசக்தியை அதன் ஆதாரப் பொருளோடு அநுபவிக்கிறோம். அதாவது கெட்ட குணங்களை விட்டு விட்டு நல்ல குணங்களை எல்லாம் அநுபவிக்கிறோம் என்பது. நல்ல குணங்களுடன் நாள் முழுதும் இருந்து படுக்கையிலும் கனவிலும் கூட நல்லபடியிருக்க, சக்தியை நன்றாய் அநுபவித்த மாதிரியாம். இதைத் தினசரி வாழ்க்கையில் நன்றாய்ப் பழகவேண்டும் முருகனுக்குக் கும்பிடு போட்டுவிட்டு நற்குணங்களுடன் சிறக்காதிருந்தால் என்ன பயன்? உள்ளமறியத் தெரிந்து செய்த தப்புக்குத் தண்டனை கொடாதுவிடார்; இறைவனிடம் அதற்கு மன்னிப்பே கிடையாது. 'புளியம் வளார் கொண்டு மோதுவன்' என்றார் அப்பர். வேண்டுமென்றால் தண்டனையைக் குறைப்பானே தவிரத் தண்டிக்காது விடான். மாணிக்கவாசகரைப் போன்று குறையிரத்தல் வேண்டும். நற்குணங்கள் நற்பண்புகளில் பழகி நல்லொ

முக்கத்தில் சிறந்தும்.... பெரியோர்களிடம் அடக்கவொடுக்கமாகவும், பெற்றோர்களுக்குப் பரிவு, உறவினருக்கு உதவி, மன்பதைத் தொண்டு, சிற்றுயிர்க் காத்தல், அரசாங்கத்து அறநெறி நிற்றல், ஏழை எளியோரிடம் கருணை, சிறியோரிடம் இரக்கம், ஆசிரியருக்குப் பணிவு முதலிய பண்புகளில் சிறந்தும் எதிலும் உண்மையை நாடும் உள்ளங் கொண்டு ஒழுகுதலே தெய்வத்தைப் பொதுவாக அநுபவிப்பது. நாம் நல்லபடி இருக்க இருக்கப் பெரிய சக்தி பெரிய ஒளி நம்மிடம் விளங்கும். அந்தத் தன்மையில் முருகன் விளங்குவான். அதை ஞாபகப் படுத்திக் கொள்ளக் கோயிலுக்கு வந்திருக்கிறோம்.

சண்முகம்:

சண்முகனுக்கு ஆறு முகங்கள்; ஐந்து வெளியே பார்க்கவும், ஒன்று உள்ளே நோக்கவுமுள்ளன. மெய் வாய் விழி நாசி செவி ஐந்தும் வெளி முகங்கள்; அஞ்சுமுகம், அஞ்சத்தக்க முகங்கள். ஆறாவது முகத்தில் தான் தணிகை (தணிவு) இருக்கிறது. உள் உள்ளே நுணுகிப் போக வேண்டும். ஆன்மாவில் எல்லா அழகும் இருக்கிறது; உள்ளே பார். எல்லாம் அழகழகாக வெளியே செய்தோம், சரி, உள்ளே அழகா யிருக்கிறோமா இல்லையா எனப் பார்ப்பதும் வாழ்க்கைக்குப் பொருத்தந் தானே.

உள்ள அழகு:

இந்தத் தமிழ்நாடு சிறந்த கலாசாரம், உயர்ந்த நாகரிகம், [illegible] மிய பண்புகள், எவ்[illegible]வோ நலங்களும் பெற்[illegible]ருந்தது. இந்த நாட்டுக்கு ஒன்று இல்லை எனச் சொல்லமுடியாத வகையில் எல்லாச் சீரும் சிறப்பும் பெற்றுச் சிறந்து விளங்கியது பழமையான நாடு. அப்படி யிருந்தும் வர வர உள்ள அழகில்லாததால் வெள்ளம் வந்து எல்லாம் வாரிக் கொண்டு போனது; நம் நாடு தமிழ் நாடு எனச் சொல்லமுடியா நிலையில் நிற்கிறோம். (ஆந்திரரும் செங்கற்பட்டு ஜில்லாவில் 400 கிராமங்கள் எங்களுடையது என்கிறார்கள்; நாம் பொறுப்புணர்ச்சியற்று இன்னும் உறங்கிக்கொண் டிருக்கிறோம்!) பிற நாட்டார் பிற மொழியினர் எல்லாருக்கும் தாராளமாய் இடம் கொடுத்தார்கள். ஏழு ஆயிரம் மைல்களுக்கப் பாலிருந்து வந்தும் நம்நாட்டைப் பற்றி நம்மை அடிமை கொண்டனர். நாடு நன்மக்கள் மொழி கலாசாரம் நாகரீகம் நூல் எல்லா மிருந்தும் என்ன பிரயோசனம்? உள்ள அழகில்லை.

இருவேறு உலகத்து இயற்கை, திருவேறு தெள்ளியராதலும் வேறு என்கிறார் பொய்யாமொழியார். சொத்தும் தேடவேண்டும்; அது, தெளிவு சம்பாதித்துக் கொண்டால்தான் நிலைக்கும். இயக்கக்காரர்கள் பசி பிணி போக்கப் பொருளாதாரம் செழிக்க, அரசு வியாபாரம் உணவு உடை நிழல் முதலியன பெற, கிளர்ச்சி செய்கிறார்கள். நல்லதுதான்; ஆக்கம் தரத் தக்கதுதான். ஆனால் அதோடு [illegible] அழகு இருந்தால்தானே நிலைக்கும் [illegible]ான..டி சிறக்கும், நிலைத்தும் [illegible] தரும். அதனால் உள்ள அழகு நிலைக்கத் தனி இயக்கம் வேண்டும். அந்தந்த இயக்கக்காரர்கள் சிறப்பாகச் செய்ய வேண்டும். ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற இயக்கம் நடந்ததுபோல உள்ள அழகை நன்றாய்க் கொள்ள அந்த இயக்கம் செய்கிறவர்களுக்கு மற்றவர் உதவியாகவும் ஆக்கமாகவுமிருக்கவேண்டும்; அப்படிச் செய்ய ஐந்து முகத்தோடு உள்ளே பார், ஆறாவது முகம் மலரும்; விஞ்ஞானம் பொருளாதாரம் தொழில் வியாபாரம் கண்டுபிடிப்பு எல்லாம் வெளியே பஞ்ச பூதத்துக் குட்பட்டவை அதாவது, ஐம்முகப் பார்வை; இவைகள் எல்லாமும் செய்; அதோடு ஆறாவது முகங் கொண்டு உள்ளேயும பார்; உள்ள அழகைச் சரிப்படுத்திக் கொள் என்கிறோம்.

அப்படியானால், அதற்குக் கோயிலென்றும் குளமென்றும் விக்கிரகமென்றும் இவையெல்லாம் வைக்கவேண்டுமா? என்றால், அப்படி நினைக்கும்படி வைத்தும், புத்தகத்தைப் போல வழிபடும் இடம் வைத்தும் வரவில்லையே! அதைக் கொண்டு நன்மை பெறுவதில் அநுபவிக்கத் தெரிந்திருக்கவேண்டும்; (பொருட்காட்சி வேறு வேறு சக்திகளைக் காட்டுகின்றன; அவைகளை அநுபவிக்கத் தெரிந்து கொள்வதற்காகப் பட்டி எழுதி வைத்திருப்பதும் சொல்லுவதும் போல) அநுபவிக்க நம் பெரியோர் வழிசெய்தும் நமக்கு அநுபவிக்க வகையில்லை.

உள் சக்தியைப்பார் என்போர் வெளி முகத்து வேலைகளை மறந்தனர்; பேசத் தெரிந்து கலை யறிந்து வெளிமுக செய்நகலைச் சாராமல்

அப்படியே போனாலும் குருட்டுத் தனம்; "இருவேறு...." எனும் குறள் நன்றாய் விளக்குகிறது. இதனை முயற்சி கிளர்ச்சி புரட்சி பண்ணிச் சம்பாதிக்க இபக்கம் தேவையே. ஆனால் இவைகள் கெட்டுப் போவனவாதலால் உள்ளே விளங்கும் அழகாகாகிய முருகக்கடவுளை தேடுவோம். அதற்கும் இபக்கம் தேவையே.

மும்முரம்:

மும்முரமானவர், சக்தியுடையவர், அழகானவர் முருகன். முருகு மூன்று 'உ'. உ சக்தி எழுத்து. அ நாம்உள்வாங்குவது; உ செலுத்துவது; அ என வாயைத் திறந்து போட்டுக் கொள்கிறோம். உ என இன்னொருவர் வாயில் ஊட்டுகிறோம் உ ஓசை வெளியில் வருவது. உ பிறரை அநுபவிக்கச் செய்வதால் நாம் அநுபவிப்பதைவிடக் கருணை அதில் அதிகம், சக்தி அதிகம். கெட்டவர்களைத்திருத்துகிறது, நல்லவர்களுக்கு அருத்துகிறது, ஊட்டுகிறது. உரம் வல்லமை. முருகு மூன்று உரம், மூன்று வல்லமை; முவ்வுரமாயிருப்பது மும்முரமாய் மூன்று சக்திகளாய் வேலைசெய்வது, அதனால் ஆன்மாவுக்குள் விளங்கும் முவ்வுரக் கடவுள் முருகப்பெருமான். உள்ளமும் அழகாயிருக்கச் செய்பவர் முருகக் கடவுள். இந்த அழகைக் கோயில், முன்னமே ஞாபகப் படுத்திக்கொண்டிருக்கின்றது, இந்தக் கந்தகோட்டத்துப் பெருமக்களும் குருகுலத்தினரும் இன்று ஞாபகப்படுத்துகிறார்கள். நாம் இன்று வழிபட்டு இங்கிருந்து போம்போதே நம் உள்ளம் அழகாவதற்காகச் சிந்தித்துக்கொண்டே போகவேண்டும்.

நமக்குப் பற்றுக்கோடானவர் கந்தர். நம் ஆன்மா அழகு பெறப் பற்றுக்கோடானவர்.

அதே மூன்று சக்திகள், இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி; அவர் கையின் வேல் ஞான சக்தி; இரு புறங்களில் இச்சை கிரியா சக்திகளாகிய வள்ளி தெய்வயானை;(பெண் தான் சக்தி; ஆண் சக்தி எனும் வழக்கில்லை) ஆதனால் மூன்று சக்தி, மூன்று உரம், மும்முரம். இச்சா சக்தி ஊக்கமாயிருப்பது, கிரியா சக்தி காரியக்காரரா யிருப்பது, ஞான சக்தி அறிவாயிருப்பது' ஊக்கமாய்க் காரியத் திறமாய் அறிவாய் இருக்க வாழ்க்கை சிறக்கும். இந்த மூன்று சக்திகளுடனிருந்தால் முருகக்கடவுள் நம்மிடம் ஆலயங்கொண்டு இருக்கிறார். கந்தின் வண்ணமாக நம் ஆன்மா பழகுவதுதான் முக்கியம். வேலெடுத்து வந்து நடனமாடிய மாதிரி ஞானத்தோடிருப்பது; வள்ளி ஊக்கம், தெய்வயானை திறமையுணர்த்தும். உள்ள அழகு வந்தால் வெளியே எந்த வேலை செய்தாலும் இந்த அழகுகளும் சிறக்கும்,பிறர்க்கென வேலை செய்வது எந்தத் தொழிலினுமிருக்கிறது; இழிந்தோர் தாழ்ந்தோர் என்றில்லாமல் ஆண்டவனுக்கு அனைவரும் பிள்ளை எனக் கருணையோடு பழகி, கருணையில் மும்முரம் செலுத்திப் பிறர்க்கென வாழும் குணநலத்துடன் சிறக்க, அம்பிகை நம்மை அப்பனிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பாள். இப்படித் தியானத்திலிருக்க வேண்டும்.

தொண்டு:

ஒரு இரகசியம்: நமக்கு மனம், வாக்கு, காயம் மூன்றும் அருளியிருக்கிறார் இறைவன், மனத்தால் நினைக்கிறோம்; வாக்கால் பேசுகிறோம், சரி; காயத்தால் என்ன செய்தோம்?

நல்ல குணத்தால் ஊக்கமாய் அழகாய்த் திறம்பட மற்றவருக்கு வேலை செய்தால் தான் கருணை பெருகும். உடம்பு கூட இருப்பதால் அதோடு கூட வேலைகள் செய்யவேண்டும்.

ஏதாவது பிறர்க்கெனத் தொண்டுகள் உதவிகள் செய்ய அப்போதுதான் குணநலம் எனும் அழகைச் செயலில் கொண்டுவருவதாகும்; குணநலம் மனம், வாக்கு, உடம்பால் செய்வது;

ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு தொண்டு மேற்கொண்டு செய்ய வேண்டும். உள்ளபடியே தொண்டுகள் செய்ய எண்ணமிருந்தால்செய்யத்தயாராயிருந்தால் குருகுலம் ஏராளமான தொண்டுகள் காட்டும். செய்ய முற்படலாம்.

நான் இதுவரை பேசியதில் நல்லதிருந்தால், தெய்வம் தந்தது எனக் கொண்டு வாழ்க்கையில் நடத்தலாம். உங்களைப் பார்ப்பது தெய்வத்தைப் பார்த்தமாதிரி இருக்கிறது. அவசியம் தொண்டுகள் மேற்கொள்ள வேண்டும். இறைவன் எல்லா நலங்களும் அருள்வானாக!

கடைசியாக, குருகுலச் செய்தியாளரின் வந்தனோபசாரத்தோடு கூட்டம் முடிவடைந்தது.

—மோகனரங்கன்.

மொழியின் ஆற்றல் பற்றி நேரு

எழுத்தாளர்களுக்கு:

....இலக்கிய வளர்ச்சியைப் புறக்கணிக்கும் எந்த நாடும் அதன் செல்வத்தால் முன்னேற முடியாது.

....மனிதனின் வாழ்க்கையில் மொழிக்கு அதிக செல்வாக்கு உண்டு.

....மொழியைக் கொண்டே ஒரு நாடு வளமையான நாடா அல்லது பலஹீனமான நாடா என்பதைத்தாம் சொல்ல முடியும் என்று மில்டன் கூறினர்.

....மொழியுடன்தான் சரித்திரம் தொடங்கியது.

....ஜீவனுள்ள பாஷையை அழிக்க முடியாது.

...எழுத்தாளர்கள் தங்கள் தங்கள் பாஷையை வளர்க்காமல் மற்றொரு மொழியைக் கீழே தள்ள முயற்சிப்பது மன்னிக்க முடியாத குற்றமாகும்.

....ஒரு மொழி அதன் சொந்த பலம் காரணமாகவே வளர்ச்சி அடைகிறது.

....எண்ணங்களுக்கு வழிகாட்டுவது எழுத்தாளர்கள்தான். என்று எராஸ்மஸ் என்னும் ஐரோப்பிய தத்துவ ஞானி கூறினர்.

....மக்களுக்கு உத்தாவிடும் பழக்கத்தை எழுத்தாளர்கள் தவிர்க்க வேண்டும்.

....சிந்தனைக்கு வழிகாட்டுவதே மொழி.

. ..எஞ்ஜினியர்களும், எழுத்தாளர்களும் நாட்டுக்கு மிகவும் அவசியமானவர்கள். (2-10.54 சுதேசமித்திரன்)

இவைகளைத் தமிழ் நன்மக்கள் கருத்திலிருத்தித் தமது மொழிக்குப் பணி செய்து நலங்களைக் காத்துக் கொள்ளவேண்டும்.

சைவப் பெரியார்...!

வழிபாடு 5-வது வாரம்– முதலிலேயே தெரியும்– இப்போது தான் கலந்துகொள்ள முடிந்தது–தலைவர் என்று இந் நிகழ்ச்சிகளுக்குத் தேவையில்லை–போட்டுவிட்டதால் சில நிமிடம் முன்னுரை

இன்று மகாத்மா நாள்–தாகூர் கொடுத்த பேர் அது. அவர் செயற்கரிய செய்தார்–விடுதலைவாங்கித் தந்தார்– சாதிக் கொடுமைகளை அகற்ற முயன்றார்– அரசியல் சாக்கடையில் சத்தியத்தை மேற்கொண்டு நடந்து காட்டினர் – மேலைநாட்டறிஞர் ஒருவர் ஆயிரம் வருடங்களுக்குப்பின் வரும் மக்கள் மகாத்மா என்று ஒருவர் வாழ்ந்தார் என்றால் நம்பமாட்டார்கள் என்றார்.

"உள்ளத்தால் பொய்யாதொழுகின் உலகத்தார் உள்ளத்துளெல்லாம் உளன்" என்றபடி இருந்தவர். காந்தி; திருவள்ளுவர் வழி வாழ்ந்தவர். அவருக்கு அந்தப் பெரிய சக்தி வந்தது அவருடைய கடவுள் பக்தியால்தான். திருவள்ளுவர் தெய்வத்தைப்பற்றி வற்புறுத்திப் பேசுகிறார். முதலிலேயே அகர முதல எழுத்தெல்லாம் என்று; ஆண்டவனை மறந்தால் மனிதன் வாழ முடியாது. எவ்வளவோ பேசுகிறான் மனிதன். ஒரு நிமிடம் மூச்சு நின்றால் போச்சு

இந்த நாளில் திருவள்ளுவர் வழிஒழுகக் குருகுல ஆசிரியர் செய்யும் தொண்டு [illegible] போற்றத் தக்கது. சோழ நாட்டுக்குச் சென்று வனம் போல் வறண்டுகிடந்த மக்கள் உள்ளத்தில் சமய விளக்க மழை பொழிந்துவந்தார். இப்போது பேட்டைகளில் தொண்டு செய்ய முன்வந்தார்கள்....

நாம் தொண்டர்கள்–ஆசிரியர் தொண்டர் தலைவர்.

குன்றக்குடியர்ர் வந்து 2 நாள் தங்கினர்–இந்த இரண்டு மூன்று நாள் நல்ல நாட்களாக இருக்கின்றன சென்னையில்.

நம்மைப் பரிசுத்த மனநிலையில் இருத்திவரும் ஆசிரியர், தம் உரைகளால் கோயில் அமைப்புகள் பற்றியும் விளக்கி வருகின்றார்கள். நல்லது.

Phone. 55034 Tel. Enkayam
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

[illegible]கிருஷ்ணப்பணை முதலியார் ஸ்டோர்ஸ்
53 கிடங்குத் தெரு. சென்னை 1.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், இ. சு. பாலசுந்தரம் குருகுல அச்சகம் மாம்பாக்கம்: மதுராந்தகம் (அஞ்)